[21st July 1964

Division by the Revenue Divisional Officer, Ranipet, to collect the taxes due for faslis 1372 and 1373 by the end of March, 1964; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (a) The Government are not aware of any particular hardship caused to the ryots of Ranipet division in North Arcot District. The taxes due for faslis 1372 and 1373 are liable to be collected during this period in the ordinary course and no avoidable hardship could possibly have been caused.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்பசெட்டியார் : ராணிப்பேட்டை டிவிஷனில் இருக்கின்ற வில்லேஜ் ஆபீஸர்கள் 72, 73-வது பசலிகளுக்கு கொடுக்கவேண்டிய வரிகளை உடனடியாக கொடுக்கவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள் என்று தகவல் வந்திருக்கிறது. இது விஷயத்தில் அரசாங்கம் தலையிட்டு விவசாயிகளை தொந்தரவு படுத்தாமல் இருக்கும்படியான அளவில் ஏதாவது நடவடிக்கை எடுக்க முன் வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு வந்த தகவல் எனக்கு வரவில்லை. இதைப்பற்றி எனக்கு தனியாக எழுதி அனுப்பினால், அதைப்பற்றி விசாரணை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : பொதுவாக வரி வசூல் செய்வது தற்போது கொடுமையாக வசூலிக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக எங்கள் பகுதியில் வரி கொடுக்கவில்லை என்பதற்காக வீட்டிலுள்ள கதவு முதலியவைகளை எல்லாம் பிடுங்கி மந்தையில் கொண்டு போட்டுவிடுகிறார்கள். கூரைகளை பிரித்து போடுகிறார்கள்; பண்ட பாத்திரங்களை எல்லாம் எடுத்து போட்டு விடுகிறார்கள்; கேஸ்களும் போட்டுவிடுகிறார்கள்; இந்த விவரங்கள் எல்லாம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தெரியுமென்றால் இதைத் தடுக்கின்ற முறையில் முன்னால் வசூல் செய்து வந்ததுபோல் நான்கு தவணையாக வசூல் செய்வதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வரிப்பணம் வசூலாக வேண்டும். இல்லாவிட்டால் திட்ட வேலைகள் நடைபெறாது. முன்பு இருந்தது போல் அதிக நிர்ப்பந்தம் இருக்கக்கூடாது, கொடுமைகள் இருக்கக்கூடாது என்று நிதானமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும் அரசாங்கம் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

Jeep Cars to Police Inspectors

* 602. *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to supply Jeep Cars to every Circle Inspector of Police to facilitate detection of crimes?

21st July 1964]

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இப்போதுள்ள நிலைமையில் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் 200, 300 சதுரமைல் சுற்றளவுக்கு இருக்கின்ற இடங்களுக்கு எல்லாம் அடிக்கடி போகவேண்டியிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் ஏதாவது சம்பவங்கள் நடந்தால் அந்த இடங்களுக்கு உடனே சென்று கேஸ்கள் எடுப்பதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே இவர்கள் உடனடியாகப் போவதற்கு வசதி செய்து கொடுக்கின்ற அளவில் இவர்களுக்கு ஜீப் கார்கள் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டிருக்கும் கேள்வியில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு ஜீப் கொடுக்க உத்தேசமுண்டா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குத்தான் இப்போது உடனடியாக இல்லை என்று சொன்னேன். பொதுவாக போலீஸ் அதிகாரிகளுக்கு சில குறிப்பிட்ட இடங்களுக்கு ஜீப் வசதிசெய்து கொடுப்பதற்கு ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது.

பாலம் கட்டுதல்

*603 **கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தஞ்சை ஜில்லாவில் ஓடும் எந்தெந்த ஆறுகளுக்கு குறுக்கே பாலம் கட்ட திட்டம் போடப்பட்டது ?

(இ) எவ்வளவு செலவில் ?

(உ) 1963-ம் ஆண்டோடு கட்டி முடிந்த பாலங்கள் எத்தனை ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

(இ) ரூபாய் 145.16 லட்சம்.

(உ) ஒன்பது பாலங்கள்.

*604. *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a river bridge across the Kushasthali river near Pallipet in Chingleput district; and

(*b*) if so, when this work will be taken up?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

---

a Printed as Appendix III on pages 535-538 infra.